**டிசம்பர் – 11**

# TNPSC துளிகள்

- காட்டு யானைகள் மற்றும் பிற வனவிலங்கு இனங்களைப் பிடிப்பது, இடமாற்றம் செய்வது, விடுவிப்பது மற்றும் விடுவித்த பிறகு கண்காணிப்பதற்கான விரிவான சீர்தர இயக்கச் செயல்முறையை (SOP) உருவாக்குவதற்காக தமிழ்நாடு அரசு ஓர் உயர் மட்ட நிபுணர் குழுவை அமைத்துள்ளது.
- இந்திய இராணுவமானது, அருணாச்சலப் பிரதேசத்தில் முதன்முதலில் காங்டோ மலையில் (7042 மீ / 23,103 அடி) ஏறுவதை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.
- அதானி குழுமமானது, தெலுங்கானாவில் 2,500 கோடி ரூபாய் செலவில் 48 மெகாவாட் திறன் கொண்ட செயற்கை நுண்ணறிவு பசுமைத் தரவு மையத்தை அமைத்து வருகிறது.
- மகாராஷ்டிராவின் தொழிலாளர் மற்றும் சமூக நீதி இயக்கங்களில் மூத்த சமதர்ம வாதத் தலைவரும் முக்கிய ஆர்வலருமான டாக்டர் பாபா ஆதவ் சமீபத்தில் காலம் ஆனார்.
- அமெரிக்கா அல்லாதச் சந்தைகளுக்கான ஏற்றுமதியில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக சீனாவின் வர்த்தக உபரி 2025 ஆம் ஆண்டில் முதல் முறையாக 1 டிரில்லியன் டாலரைத் தாண்டியது.
- உயரமான எல்லைப் பகுதியில் அனைத்து வானிலைகளிலுமான போக்குவரத்து இணைப்பையும் வழங்குவதற்காக எல்லைச் சாலைகள் அமைப்பால் (BRO) லடாக்கில் கட்டமைக்கப்பட்ட 920 மீட்டர் நீள ஷியோக் சுரங்கப்பாதையானது பாதுகாப்புத் துறை அமைச்சரால் சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டது.
- யுனெஸ்கோவின் மகத்தான கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான அரசுகளுக்கிடையேயான குழுவின் (ICH- 2025) 20வது அமர்வை இந்தியா புது டெல்லியில் நடத்துகிறது.
- உலகின் அதிகளவில் செயல்பாட்டில் இருக்கும் எரிமலைகளில் ஒன்றான கிலாவியா, அதன் தொடர்ச்சியான வெடிப்புக் கட்டத்தின் ஒரு பகுதியாக ஹவாய் எரிமலைகள் தேசியப் பூங்காவிற்குள் புதிய பாறைக் குழம்பு ஊற்றுகளை உருவாக்கியுள்ளது.
- சிறப்புத் தீவிர திருத்தம் (SIR) திட்டத்தின் கீழ் வாக்காளர் பட்டியல்களை 100% டிஜிட்டல் மயமாக்கிய முதல் மாநிலமாக இராஜஸ்தான் மாறியது.
    - அம்மாநில அரசானது, இந்தியாவிலேயே மிகவும் உயர்ந்ததாக 97% வாக்காளர் வரைபடப் பதிவினையும் நிறைவு செய்துள்ளது.
- மேற்குத் தொடர்ச்சி மலைகளில் குடகு ஷேடோடம்செல் (புரோட்டோஸ்டிக்டா சூரியப் பிரகாஷி) என்ற புதிய ஊசித் தட்டான் இனம் கண்டுபிடிக்கப்பட்டது.
    - மேற்குத் தொடர்ச்சி மலை வளங்காப்பிற்கு டாக்டர் சூரியப் பிரகாஷ் ஷெனாய் ஆற்றியப் பங்களிப்புகளுக்காக இந்த இனத்திற்கு அவரது பெயரிடப்பட்டது.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## ASI டிஜிட்டல் கல்வெட்டுத் திட்டம்

- இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையின் (ASI) கல்வெட்டுப் பிரிவு ஆனது அனைத்து தமிழ் கல்வெட்டுகளையும் ஸ்கேன் செய்து எளிதாக அணுகுவதற்காக ஒரு பிரத்தியேக இயங்கலை களஞ்சியத்தில் பதிவேற்றுவதன் மூலம் டிஜிட்டல் மயமாக்கத் தொடங்கி

உள்ளது.

- ASI ஆனது 24,806 தமிழ் கல்வெட்டுப் படிகளைக் கொண்டுள்ளது என்பதோடு மேலும் 13,740 கல்வெட்டுகளுக்கான ஸ்கேன் செய்யும் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன என்ற நிலையில் இப்பணியானது கிட்டத்தட்ட சுமார் 25,000 தமிழ்க் கல்வெட்டுகளையும் உள்ளடக்கியுள்ளது.
- இந்தப் பிரிவானது அரபு மற்றும் பாரசீக மொழிகள் உள்ளிட்ட பிற இந்திய மொழிகளிலும் உள்ள கல்வெட்டுகளின் கல்வெட்டுப் படிகளையும் டிஜிட்டல் மயமாக்கி வருகிறது.
- இந்தப் பணி பாரத் பகிரப்பட்ட கல்வெட்டுக் களஞ்சியத்தின் (BharatSHRI) ஒரு பகுதி ஆகும்.
- BharatSHRI என்பது ஒரு டிஜிட்டல் கல்வெட்டு அருங்காட்சியகமாகும் என்பதோடு இது பதிவு செய்யப் பட்ட அனைத்து கல்வெட்டுகளின் முழுமையான டிஜிட்டல் காப்பகத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஒவ்வொரு ஸ்கேன் செய்யப்பட்ட கல்வெட்டுப் படிகளிலும் அதன் இருப்பிடம், மன்னர், வம்சம், மொழி, எழுத்து, காலம் மற்றும் எழுத்தாக்கம் ஆகியவற்றைக் குறிப்பிடும் விளக்கமான மாபெரும் தரவு உள்ளது.
- இந்தத் திட்டம் அறிஞர்கள் மற்றும் பொதுமக்கள் கல்வெட்டுத் தரவை ஒரே டிஜிட்டல் தளம் மூலம் எளிதாக அணுக உதவுகிறது.




## நீதிபதி சுவாமிநாதனுக்கு எதிரான பதவி நீக்கத் தீர்மானம்

- இந்தியா கூட்டணியின் எம்.பி.க்கள், நீதிபதி சுவாமிநாதனுக்கு எதிராக பதவி நீக்கத் தீர்மானத்தை முன்மொழிய லோக்சபா சபாநாயகரிடம் கடிதம் சமர்ப்பித்தனர்.
- இந்திய அரசியலமைப்பின் பிரிவு 124 உடன் சேர்த்து படிக்கப்பட்ட பிரிவு 217ன் கீழ் அவரை நீக்குவதற்கான தீர்மானத்தை அவர்கள்முன்மொழிய முயன்றனர்.
- நீதிபதி சுவாமிநாதனின் நடத்தை, பாரபட்சமற்ற தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் நீதித்துறையின் மதச்சார்பற்ற செயல்பாடு குறித்து கடுமையான கேள்விகளை எழுப்பியதாக அவர்கள் கூறினர்.
- மாநிலங்களவை மற்றும் மக்களவை உறுப்பினர்கள் எழுதிய கடிதங்களின் நகல்களை இந்தியக் குடியரசு தலைவர் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியிடம் எம்.பி.க்கள் சமர்ப்பித்தனர்.
- மக்களவையின் நூறு உறுப்பினர்கள் அல்லது மாநிலங்களவையின் 50 உறுப்பினர்கள் ஒரு உயர் நீதிமன்ற நீதிபதிக்கு எதிரான பதவி நீக்கத் தீர்மானத்தில் கையெழுத்திட

வேண்டும்.

- தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டால், மூன்று பேர் கொண்ட குழு அதை விசாரிக்கும்.
- அதன் பிறகு, இரு அவைகளும் சிறப்புப் பெரும்பான்மையுடன் (மூன்றில் இரண்டு பங்கு வருகை மற்றும் வாக்களிப்பு, மொத்த உறுப்பினர்களின் முழுமையான பெரும்பான்மை) அததீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும்.
- இறுதியாக, குடியரசு தலைவர் பதவி நீக்க உத்தரவைப் பிறப்பிப்பார்.
- இருப்பினும், இந்தியாவில் எந்த நீதிபதியும் இதுவரையில் வெற்றிகரமாக பதவி நீக்கம் செய்யப்படவில்லை.





# தேசியச் செய்திகள்

## 10வது அட்டவணை திருத்த மசோதா 2025

- அரசியலமைப்பின் 10வது அட்டவணையைத் திருத்துவதற்காக 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மக்களவையில் ஒரு தனி நபர் உறுப்பினர் மசோதா அறிமுகப் படுத்தப் பட்டது.
- இந்த மசோதாவானது, கடுமையான கட்சி கொறடா அமலாக்கத்தைக் குறைத்து, பாராளுமன்ற உறுப்பினர்கள் மசோதாக்கள் மற்றும் முன்மொழிவுகளில் / பிரேரணைகளில் சுயாதீனமாக வாக்களிக்க அனுமதிக்க முயல்கிறது.
- 10வது அட்டவணை ஆனது 1985 ஆம் ஆண்டு 52வது திருத்தச் சட்டத்தினால் சேர்க்கப் பட்டது.
- இது கொள்கையற்ற கட்சித் தாவல்களை தடுக்கவும் அரசியல் உறுதித்தன்மையை உறுதி செய்யவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- கொறடாக்கள் என்பது பாராளுமன்ற/சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு குறிப்பிட்ட முறையில் வாக்களிக்க அரசியல் கட்சிகளால் வழங்கப்படும் வழிமுறைகள் ஆகும், என்பதோடு கொறடாவினை மீறுவது 10வது அட்டவணையின் கீழ் தகுதி நீக்கத்திற்கு வழி வகுக்கும்.




# சர்வதேசச் செய்திகள்


## அமெரிக்க தேசியப் பாதுகாப்பு உத்தி 2025

- டிரம்ப் நிர்வாகம் இறுதியாக அதன் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட தேசியப் பாதுகாப்பு உத்தியை (NSS) வெளியிட்டது.
- அமெரிக்கக் குடியரசுத் தலைவர்கள் வழக்கமாக ஒவ்வொரு வெள்ளை மாளிகை பதவிக் காலத்திலும் ஒரு தேசியப் பாதுகாப்பு உத்தியை வெளியிடுவார்கள்.
- 2022 ஆம் ஆண்டில் ஜோ பைடனால் வெளியிடப்பட்ட கடைசி ஆவணம், "ஆபத்தான" ரஷ்யாவை கட்டுப்படுத்தும் அதே வேளையில் சீனாவை விடப் போட்டித் தன்மையுடன் வெற்றி பெறுவதற்கு முன்னுரிமை அளித்தது.
- டிசம்பர் 2017 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட முதல் கால NSS உடன் ஒப்பிடும்போது, புதிய ஆவணம் குறிப்பிடத்தக்க வகையில் குறுகியதாகவும் MAGA சார்ந்ததாக மிகவும் கவனம் செலுத்துவதாகவும் உள்ளது.
- "அமெரிக்கா முதலில்" முன்னுரிமைகள் ஆனது, அமெரிக்கா அதன் முக்கிய தேசிய நலன்களாக வரையறுக்கும் மையத்தின் நோக்கத்தை கணிசமாகக் குறைக்கின்றன.
- இது அமெரிக்க வெளியுறவுக் கொள்கையின் தீவிர மறுசீரமைப்பை வகுத்தது.
- இது நீண்ட கால வல்லரசின் கவனத்தை உலகளாவிய மையத்திலிருந்து அதன் பிராந்தியத்திற்கு மாற்றுகிறது.
- ஐரோப்பாவானது "நாகரிக அழிப்பை" எதிர்கொள்வதாகவும், வெகு ஜன இடம் பெயர்வை நீக்குவதில் முதன்மையானதொரு முன்னுரிமையை அளிப்பதாகவும் அது விமர்சிக்கிறது.
- வளர்ந்து வரும் சீனாவை எதிர்கொள்ள ஆசியாவில் கவனம் செலுத்த வேண்டும் என்ற அமெரிக்காவின் நீண்ட கால அழைப்புகளிலிருந்து, லத்தீன் அமெரிக்காவை அமெரிக்க நிகழ்ச்சி நிரலின் உச்சத்திற்கு உயர்த்துகிறது.
- ஒரே வல்லரசாக இருக்க பல தசாப்தங்களாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை அது முறித்துக் கொண்டிருந்தது.


- "உலக ஆதிக்கம் என்ற ஒரு துரதிர்ஷ்டவசமான கருத்தை அமெரிக்கா நிராகரிக்கிறது" என்று அந்த உத்தி எடுத்துரைக்கிறது.
- சீனா உட்பட பிற சக்திகள் ஆதிக்கம் செலுத்துவதை அமெரிக்கா தடுக்கும் என்றும் அது கோரியது.
- ஆனால் "உலகின் அனைத்து பெரிய மற்றும் நடுத்தர சக்திகளின் செல்வாக்கைக் குறைக்க இது தனது இரத்தத்தையும் செல்வத்தையும் வீணாக்குவதை அர்த்தப் படுத்துவதில்லை" என்றும் அது மேலும் கோரியது.
- இடம்பெயர்வுடன் தொடங்கி, "நமது அரைக் கோளத்தில் அவசர அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்ய நமது உலகளாவிய இராணுவ இருப்பை மறுசீரமைக்க" இந்த உத்தியானது அழைப்பு விடுத்தது.
- "பெரும் குடியேற்ற சகாப்தம் முடிவுக்கு வர வேண்டும்" என்று அந்த உத்தி கோரியது.
- டிரம்பின் கீழ் அமெரிக்கா, தீவிர வலதுசாரி கட்சிகளின் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப, ஐரோப்பாவில் இதே போன்ற நோக்கங்களை தீவிரமாகத் தொடரும் என்பதை இந்த உத்தி தெளிவுபடுத்தியது.
- உக்ரைன் போருக்கு முற்றுப்புள்ளி வைக்க இது முயல்கிறது.
- இந்த உத்தியானது ஐரோப்பியர்கள் பலவீனமாக இருப்பதாக குற்றம் சாட்டியது.
- லத்தீன் அமெரிக்காவில் அமெரிக்க ஆதிக்கத்தை அழுத்துவதை இந்த உத்தி துணிச்சலான வார்த்தைகளில் பேசுகிறது என்பதோடு அங்கு டிரம்ப் நிர்வாகம் கடலில் போதைப்பொருள் கடத்தல்காரர்களைத் தாக்கி வருவதோடு, வெனிசுலா உட்பட இடது சாரித் தலைவர்களை வீழ்த்தத் தலையிடுவதோடு, மேலும் பனாமா கால்வாய் போன்ற முக்கிய வளங்களையும் கைப்பற்ற முயல்கிறது.
- இந்த உத்தி டிரம்ப்பை இரண்டு நூற்றாண்டு பழமையான மன்றோ கோட்பாட்டை நவீனமயமாக்குவதாக சித்தரித்தது என்ற நிலையில் அதில் அப்போதைய இளம் அமெரிக்கா லத்தீன் அமெரிக்காவை தன்னைப் போன்ற போட்டிச் சக்திகளுக்கு ஒரு தடையாக அறிவித்தது.
- இந்த உத்தியானது நீண்ட காலமாக வாஷிங்டனை விழுங்கிய மத்திய கிழக்கிற்கு ஒப்பீட்டளவில் சிறிய கவனத்தையே செலுத்தியது.
- இஸ்ரேல் பாதுகாப்பாக இருப்பது அமெரிக்காவின் ஒரு முன்னுரிமையாக இருந்தது ஆனால் முதல் டிரம்ப் நிர்வாகத்தில் கூட இஸ்ரேல் பற்றிய முழுமையான மொழியைப் பயன்படுத்தவில்லை.
- சீனாவைப் பொறுத்தவரை, இந்த உத்தி "சுதந்திரமான மற்றும் திறந்த" ஆசிய-பசிபிக் பிராந்தியத்திற்கான அழைப்புகளை மீண்டும் மீண்டும் செய்தது ஆனால் ஒரு பொருளாதாரப் போட்டியாளராக அந்த நாட்டின் மீது அதிக கவனம் செலுத்தியது.
- பெய்ஜிங் உரிமை கோரும் சுயாட்சி ஜனநாயகமான தைவானை டிரம்ப் விட்டுக் கொடுப்பாரா என்பது குறித்து பல ஊகங்களுக்குப் பிறகு, அமெரிக்கா பல தசாப்தங்களாக தொடர்ந்து நீடிக்கும் நிலையை ஆதரிக்கிறது என்பதை இந்த உத்தி தெளிவுபடுத்தியது ஆனால் சீனாவிடமிருந்து தைவானின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு அதிகம் பங்களிக்க என்று நட்பு நாடுகளான ஜப்பான் மற்றும் தென் கொரியாவையும் அது அழைத்தது.
- இந்த உத்தியானது எதிர்பார்க்கக் கூடிய வகையில் ஆப்பிரிக்காவில் சிறிதும் கவனம் செலுத்தவில்லை என்பதோடு அமெரிக்கா "தாராளவாத சித்தாந்தத்திலிருந்து" மற்றும் "உதவி சார்ந்த உறவிலிருந்து" விலகி, முக்கியமான கனிமங்களைப் பாதுகாப்பது போன்ற இலக்குகளை வலியுறுத்த வேண்டும் என்று கூறுகிறது.
- இது டிரம்பின் வெளியுறவுக் கொள்கை பார்வையை "நெகிழ்வான யதார்த்த வாதத்தின்" ஒன்றாக அமைத்ததோடு மேலும் அமெரிக்காவின் கொள்கையானது

எல்லாவற்றிற்கும் மேலாக "அமெரிக்காவிற்கு எது சரியாக இருக்கும்" என்பதன் மூலம் இயக்கப்படும் என்றும் கூறியது.

- இது வாஷிங்டனுக்குப் புது தில்லியின் உத்திசார் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகிறது மற்றும் உலகளாவியப் பாதுகாப்பு மற்றும் உத்திசார் முயற்சிகளில் இந்தியாவை ஒரு முக்கியப் பங்குதாரராக அடையாளம் காட்டுகிறது.
- பொருளாதாரம், தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்புத் துறைகளில் புது தில்லியுடன் ஒத்துழைப்பை ஆழப்படுத்துவதே இதன் நோக்கம்.
- வட கொரியாவை அணு ஆயுதமற்றதாக்குவது குறித்த எந்தக் குறிப்பையும் அது கோர வில்லை.
- 2026 ஆம் ஆண்டில் பியோங்யாங்குடன் (வட கொரியா நாடு) ஒரு இராஜதந்திர முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை அதிகரிக்க வாஷிங்டன் முயற்சிக்கும் என்ற ஊகத்தைத் தூண்டியது.




## UNSC தீர்மானம் 2803




- அமெரிக்க அதிபரின் 20 அம்ச காசா திட்டத்தை ஆதரித்து UN பாதுகாப்பு சபை 2803 தீர்மானத்தை நிறைவேற்றியது.
- இந்தத் திட்டம் காசாவை இடைக்கால நிர்வாகமாக நிர்வகிப்பதற்கான ஓர் அமைதி வாரியத்தை (BoP) முன்மொழிகிறது.
- இது பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் ஆயுதக் குழுக்களின் ஆயுத நீக்கத்திற்கும் ஒரு சர்வதேச நிலைப்படுத்தல் படையை (ISF) உருவாக்குகிறது.
- ஹமாஸ் உள்ளிட்ட முக்கியப் பாலஸ்தீனக் குழுக்களின் ஒப்புதல் இல்லாமல் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது.

- ஹமாஸ் ஆயுத நீக்கத்தினையும் BoP வாரியத்தினையும் வெளிப்புறக் கட்டுப்பாட்டு வழி முறைகள் என்று அழைத்து நிராகரித்தது.

## அமைதி மற்றும் செழிப்புக்கான வாஷிங்டன் ஒப்பந்தங்கள் 2025




- பல ஆண்டு கால மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக காங்கோ ஜனநாயக குடியரசு (DRC) மற்றும் ருவாண்டா அமைதி மற்றும் செழிப்புக்கான வாஷிங்டன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன.
- இந்த ஒப்பந்தத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான அமைதி ஒப்பந்தம், பொருளாதார ஒத்துழைப்பு கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவை அடங்கும்.
- கிழக்கு காங்கோ ஜனநாயகக் குடியரசில் விரோதப் போக்கை நிறுத்துதல், ஆயுதக் குழுக்களைத் தடுத்தல் மற்றும் மனிதாபிமான அணுகலை உறுதி செய்தல் ஆகியவற்றை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஒப்பந்தம் இறையாண்மை, ஆயுதக் குறைப்பு மற்றும் நீண்டகாலப் பிராந்திய உறுதித் தன்மைக்கு மரியாதை செலுத்துவதை வலியுறுத்துகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஆய்வகத்தில் உருவாக்கப்படும் பால்

- இஸ்ரேலில் உள்ள புத்தொழில் நிறுவனமானது, 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஆய்வகத்தில் உருவாக்கப்படும் "பசுவிலிருந்து பெறப்படாத" பாலை வணிக ரீதியாக அறிமுகப்படுத்த உள்ளது.
- ஆய்வகத்தில் உருவாக்கப்படும் பால் என்பது உயிரித் தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்திப் பசுக்கள் இல்லாமல் தயாரிக்கப்படும் உண்மையான பால் பொருள் ஆகும்.
- இதில் பசுவின் பாலுக்கு ஒத்ததாக இருக்கின்ற கேசீன் மற்றும் வே புரதங்கள் உள்ளன என்பதோடு இது சீஸ், தயிர் மற்றும் யோகர்ட் ஆகியவற்றிற்கு ஏற்றதாக உள்ளது.
- பால் உற்பத்தி செய்யும் மரபணுக்கள் பால் புரதங்களைச் சுரக்கும் நுண்ணுயிரிகளில் சேர்க்கப்பட்டு துல்லியமான நொதித்தல் மூலம் தயாரிக்கப்படுகிறது.

- இந்தப் பால் லாக்டோஸ் இல்லாதது, கொழுப்பு இல்லாதது, ஹார்மோன் இல்லாதது, என்பதோடு ஊட்டச்சத்து ரீதியாக இது வழக்கமான பாலினை ஒத்திருக்கிறது மற்றும் கொழுப்பு அல்லது லாக்டோஸ் உள்ளடக்கத்திற்கு ஏற்ப தனிப் பயனாக்கக் கூடியது.
- ஆய்வகத்தில் உருவாக்கப்படும் பால் ஆனது நெறிமுறை மற்றும் பருவநிலைக்கு ஏற்றது என்பதோடு விலங்குப் பயன்பாடு, மீத்தேன் வெளியேற்றம் மற்றும் சுற்றுச் சூழல் தாக்கத்தைக் குறைக்கிறது.




### பாரத்ஜென் AI அமைப்பு முன்னெடுப்பு




- பாரத்ஜென் தொழில்நுட்ப அறக்கட்டளை ஆனது பம்பாயின் இந்தியத் தொழில் நுட்பக் கல்விக் கழகத்தில் பதிவு செய்யப் பட்டது.
- இந்த முன்னெடுப்பு இந்தியாவின் பன்மொழி மற்றும் பன்முக கலாச்சாரச் சூழலுக்கு ஏற்றவாறு ஒரு பெரிய மொழி மாதிரியை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்தத் திட்டம் உரை மற்றும் பேச்சு ஆகிய இரண்டிலும் 22க்கும் மேற்பட்ட இந்திய மொழிகளை ஆதரிக்கும்.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### மாநிலங்களுக்கு இடையேயான புலிகளின் பரிமாற்றம்

- இராஜஸ்தான் அரசானது மத்தியப் பிரதேசத்தில் உள்ள பென்ச் புலிகள் வளங்

காப்பகத்திலிருந்து ஒரு புலியை (Tigress PN-224) கொண்டு வருவதன் மூலம் அதன் மாநிலங்களுக்கு இடையேயான முதலாவது புலி இட மாற்றத்தை மேற்கொள்கிறது.

- இது இந்தியாவின் இரண்டாவது புலி இடமாற்றமாகும்.
- புலிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் மரபணு பன்முகத் தன்மையை மேம்படுத்தவும் உதவும் வகையில், ராம்கர் விஷதாரி புலிகள் வளங்காப்பகத்திற்கு (RVTR) விமானம் மூலம் புலிகள் கொண்டு செல்லப் படும்.
- 2022 ஆம் ஆண்டு மே மாதத்தில் அறிவிக்கப்பட்ட RVTR ஆனது இராஜஸ்தானின் பூண்டி மாவட்டத்தில் உள்ளது என்பதோடு இது ஒரு மைய மற்றும் இடையக மண்டலத்துடன் 1,501.89 சதுர கி.மீ பரப்பளவைக் கொண்டுள்ளது.
- இந்த வளங்காப்பகம் இரந்தம்போர் புலிகள் வளங்காப்பகம் மற்றும் முகுந்தரா மலைகள் புலிகள் வளங்காப்பகம் இடையே ஓர் இயற்கை வழித்தடத்தை உருவாக்கி, புலிகளின் நடமாட்டத்திற்கு உதவுகிறது.
- இந்த இடமாற்றம் ஆனது புதிய வாழ்விடத்தை வலுப்படுத்துவதையும், புலிகள் வளங் காப்புத் திட்டக் குழுவின் கீழ் நீண்ட கால வளங்காப்பை ஆதரிப்பதையும் ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புலிகளை வழங்கும் கொடைத் தளமான பென்ச் புலிகள் சரணாலயம், தேக்கு காடுகள் மற்றும் புலிகள், சிறுத்தைகள் மற்றும் காட்டு நாய்கள் உள்ளிட்ட வளமான வன விலங்குகளுக்குப் பெயர் பெற்றது.
- இந்தியாவின் முதல் பெரிய மாநிலங்களுக்கு இடையேயான புலி இடமாற்றம் 2018 ஆம் ஆண்டில் மத்தியப் பிரதேசத்திலிருந்து ஒரு ஆண் புலி (கன்ஹாவைச் சேர்ந்த மகாவீர்) மற்றும் ஒரு பெண் புலி (பந்தவ்கரைச் சேர்ந்த சுந்தரி) ஒடிசாவின் சட்கோசியா புலிகள் காப்பகத்திற்கு மாற்றப் பட்டு நடந்தது.




## ஐ.நா. சுற்றுச்சூழல் சபை 2025


- ஏழாவது ஐ.நா. சுற்றுச்சூழல் சபை (UNEA-7) ஆனது கென்யாவின் நைரோபியில் ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டத்தின் (UNEP) கீழ் நடைபெற்றது.
- UNEA என்பது மிக உயர்ந்த உலகளாவிய சுற்றுச்சூழல்சார் முடிவெடுக்கும் மன்றம் ஆகும் என்பதோடு இது ரியோ+20 மாநாட்டிற்குப் பிறகு 2012 ஆம் ஆண்டில்

உருவாக்கப் பட்டது.

- UNEA-7 (2025) சபையின் கருத்துரு, "Advancing sustainable solutions for a resilient planet" என்பதாகும்.
- உலகளாவியச் சுற்றுச்சூழல் கொள்கைகளை சீரமைப்பதற்காக 2026–2030 ஆம் ஆண்டுகளுக்கான UNEP அமைப்பின் நடுத்தரக் கால உத்தியை (MTS) இந்தச் சபை அங்கீகரித்தது.
- UNEP அமைப்பின் MTS, பருவநிலை நிலைத்தன்மை, பல்லுயிர்ப் பாதுகாப்பு, சுழிய அளவிலான மாசுபாடு, மீள்தன்மை கொண்ட சுற்றுச்சூழல் அமைப்புகள், நிலையான வளப் பயன்பாடு மற்றும் வலுவான சுற்றுச்சூழல் நிர்வாகம் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.




## இந்தியாவின் மிகவும் மாசுபட்ட நகரம் – காசியாபாத்




- இந்த அறிக்கையை எரிசக்தி மற்றும் தூய்மையான காற்று ஆராய்ச்சி மையம் (CREA) வெளியிட்டுள்ளது.

- காசியாபாத் நகரில், 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்தியாவில் மிக உயர்ந்த பட்சமாக PM2.5 அளவு பதிவானது.
- தேசிய தலைநகரப் பிராந்திய (NCR) நகரங்களில் 20 நகரங்கள் 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தினை விட மிக மோசமான மாசுபாட்டைக் கொண்டிருந்ததாக இந்த அறிக்கை குறிப்பிட்டது.
- டெல்லி, நொய்டா, பகதூர்கர், கிரேட்டர் நொய்டா மற்றும் பாகபட் ஆகியவை மிகவும் மாசுபட்ட மற்ற NCR நகரங்கள் ஆகும்.
- குறைவான பயிர்த் தாளடி எரிப்பு இங்கு இருந்த போதிலும், மாசுபாடு அதிகரிப்பு என்பது மிக முக்கியமாக நகர்ப்புற உமிழ்வு, போக்குவரத்து, தூசி மற்றும் குளிர்கால குளிர்ந்தக் காற்றின் கீழமிழ்தல் காரணமாக ஏற்பட்டது.
- ஷில்லாங் (மேகாலயா) PM2.5 பதிவுடன் தூய்மையான நகரமாக உருவெடுத்தது.

# மாநிலச் செய்திகள்

## மகாதேவா திட்டம்





- 13 வயதிற்குட்பட்ட திறமை கொண்ட சிறுவர் மற்றும் சிறுமிகளைக் கண்டுபிடித்து கால்பந்தில் பயிற்சி அளிக்க மகாராஷ்டிரா அரசு மகாதேவா திட்டத்தைத் தொடங்கி உள்ளது.
- மகாராஷ்டிரா முழுவதும் மாவட்ட அளவிலான, பிராந்திய மற்றும் மாநில அளவிலான சோதனைகள் மூலம் தேர்வு செய்யப்பட்டது.
- மொத்தம் 30 சிறுவர்களும் 30 சிறுமிகளும் தேர்வு செய்யப்பட்டனர் என்ற நிலையில், ஒவ்வொருவருக்கும் பயிற்சி, கல்வி, ஊட்டச்சத்து, உடற்பயிற்சி மற்றும் பயிற்சி ஆதரவு உள்ளிட்ட முழு ஐந்தாண்டு உதவித் தொகை ஆகியவை இதில் வழங்கப்படும்.
- இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, தேர்ந்தெடுக்கப்பட்ட 60 வீரர்களும் மும்பையில் உள்ள GOAT கால்பந்து கிளினிக்கில் கால்பந்து ஜாம்பவான் லியோனல் மெஸ்ஸியுடன் பயிற்சி பெறுவார்கள்.

- இந்தத் திட்டமானது, இளம் திறமைகளை நீண்டகால அடிப்படையில் ஆதரிப்பதன் மூலம் வலுவான அடிமட்டக் கால்பந்து அமைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### சூரிய சக்தியில் இயங்கும் நீரேற்றிகள் நிறுவலில் உலக சாதனை

- மகாராஷ்டிரா அரசானது 30 நாட்களில் கட்டமைப்பிற்குள் உட்படாத 45,911 சூரிய சக்தியில் இயங்கும் வேளாண் நீரேற்றிகளை நிறுவி, கின்னஸ் உலக சாதனையைப் படைத்தது.
- இந்த நிறுவல்கள் PM-KUSUM (பிரதான் மந்திரி கிசான் உர்ஜா சுரக்ஷா ஏவம் உத்தன் மகாபியான்) திட்டத்தின் கூறு B மற்றும் மாகேல் தியால சவுர் க்ருஷி பம்ப் யோஜனா ஆகியவற்றின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.
- இம்மாநில அரசானது இதுவரையில் 7.47 லட்சத்திற்கும் மேற்பட்ட சூரிய சக்தியில் இயங்கும் நீரேற்றிகளை நிறுவியுள்ளது என்பதோடு மேலும் இது 10.45 லட்சத்தை இலக்காகக் கொண்டுள்ளது.





## விளையாட்டுச் செய்திகள்

### ISSF உலகக் கோப்பை போட்டி 2025

- கத்தாரின் தோஹாவில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு ISSF (சர்வதேச துப்பாக்கி சுடும் விளையாட்டு கூட்டமைப்பு) உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் இந்தியா ஆறு பதக்கங்களை வென்றது.
- இந்தியாவின் பதக்கப் பட்டியலில் இரண்டு தங்கங்கள், மூன்று வெள்ளிகள் மற்றும் ஒரு வெண்கலம் அடங்கும்.
- ஒட்டு மொத்தப் பதக்கப் பட்டியலில் சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாவது இடத்தைப் பிடித்தது.
- சிம்ரன்பிரீத் கவுர் பிரார் (மகளிர் 25 மீட்டர் சுழல் துப்பாக்கிச் சுடுதல்/பிஸ்டல்) மற்றும்

சுருச்சி போகட் (மகளிர் 10 மீட்டர் காற்றுப் பீச்சுக் குழல் துப்பாக்கிச் சுடுதல்/ஏர் பிஸ்டல்) தங்கப் பதக்கங்களை வென்றனர்.


- சைன்யம், ஐஸ்வரி பிரதாப் சிங் தோமர் (ஆடவர் 50 மீட்டர் துப்பாக்கிச் சுடுதல்-3 நிலை) மற்றும் அனிஷ் பன்வாலா (ஆடவர் 25 மீட்டர் விரைவு சுழல் துப்பாக்கிச் சுடுதல்) வெள்ளிப் பதக்கங்களை வென்றனர்.
- சாம்ராட் ராணா (ஆடவர் 10 மீட்டர் ஏர் பிஸ்டல்) வெண்கலப் பதக்கத்தை வென்றனர்.




| RANK | COUNTRY | GOLD | SILVER | BRONZE | TOT |
|---|---|---|---|---|---|
| 1 | CHN | 4 | 2 | 3 | 9 |
| 2 | IND | 2 | 3 | 1 | 6 |
| 3 | USA | 2 | 2 | 2 | 6 |
| 4 | CZE | 1 | 0 | 0 | 1 |
| 4 | ITA | 1 | 0 | 0 | 1 |

# முக்கிய தினங்கள்

## 41வது SAARC சாசன தினம் – டிசம்பர் 08




- இந்த நாள் வங்காளதேசத்தின் டாக்காவில் நடைபெற்ற முதல் SAARC உச்சி மாநாட்டில் SAARC சாசனம் (1985) ஏற்றுக் கொள்ளப் பட்டதைக் குறிக்கிறது.

- 2025 ஆம் ஆண்டு நிகழ்வு ஆனது தெற்காசியாவில் பருவநிலைத் தகவமைப்பு சார்ந்த வேளாண்மையில் பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.
- "ஒரு சுகாதாரம் என்ற சூழலில் தெற்காசியாவில் பருவநிலைக்கு உகந்த கால்நடை உணவு முறைக்கான பிராந்திய ஒத்துழைப்பு" என்பதில் இதன் முக்கிய உரை கவனம் செலுத்தியது.
- SAARC என்பது ஆப்கானிஸ்தான், வங்காளதேசம், பூடான், இந்தியா, மாலத்தீவுகள், நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய 8 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பிராந்தியக் கூட்டமைப்பாகும்.
- SAARC அமைப்பின் செயலகம் நேபாளத்தின் காத்மாண்டுவில் அமைந்துள்ளது.

## 58வது நீர்மூழ்கிக் கப்பல் தினம் - டிசம்பர் 08

- இந்தியக் கடற்படையின் முதல் நீர்மூழ்கிக் கப்பலான ஐஎன்எஸ் கல்வாரி 1967 ஆம் ஆண்டு டிசம்பர் 08 ஆம் தேதியன்று படையில் இணைக்கப்பட்டதை நினைவு கூரும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
- நீர்மூழ்கிக் கப்பல் தினத்தின் முதல் அனுசரிப்பு 1968 ஆம் ஆண்டில் நடைபெற்றது.
- கடற்படையின் தலைமையகம் புது டெல்லியில் அமைந்துள்ளது.





# இதரச் செய்திகள்

## போதி தினம் 2025


- போதி மரத்தின் கீழ் புத்தர் ஞானம் பெற்றதைக் குறிக்கும் வகையில் இந்த நாள் அனுசரிக்கப் படுகிறது.
- புத்தராக (விழித்தெழுந்தவர்) மாறிய கௌதம சித்தார்த்தர் ஒரு உன்னத நிலையை அடைந்ததை இது நினைவு கூர்கிறது.
- அமைதியான சிந்தனை மூலம் ஞானம், இரக்கம் மற்றும் சுய உணர்தலை மேம்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நான்கு உன்னத உண்மைகள் மற்றும் உன்னத எண்வகை மார்க்கங்கள் போன்ற

முக்கியப் போதனைகளை இந்த நாள் எடுத்துக்காட்டுகிறது.

- யுனெஸ்கோ (ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு) தளமான புத்த கயா ஒரு முக்கிய யாத்திரை மையமாகும்.




## தாதாபாய் நௌரோஜி அவர்களின் 200வது பிறந்தநாள்




- 2025 ஆம் ஆண்டில் இந்தியா தாதாபாய் நௌரோஜி அவர்களின் (1825–1917) 200வது பிறந்த நாளைக் கொண்டாடியது.
- இத்தினம் ஒரு தேசியவாதத் தலைவர், பொருளாதாரச் சிந்தனையாளர் மற்றும் சமூக சீர்திருத்தவாதி என்ற அவரது பாரம்பரியத்தைக் கௌரவிக்கிறது.
- அவர் 1825 ஆம் ஆண்டு செப்டம்பர் 04 ஆம் தேதியன்று பம்பாயில் பிறந்தார் மற்றும் எல்பின்ஸ்டன் நிறுவனத்தில் படித்த அவர் பின்னர் எல்பின்ஸ்டன் கல்லூரியில் முதல் இந்தியப் பேராசிரியரானார்.
- பிரிட்டிஷ் ஆட்சி ஆனது சம்பளம், ஓய்வூதியம், பணம் அனுப்புதல் மற்றும் சமமற்ற

வர்த்தகம் மூலம் இந்தியாவின் வளங்களை எவ்வாறு சுரண்டியது என்பதைக் காட்டும் Drain of Wealth கோட்பாட்டினை நௌரோஜி உருவாக்கினார்.

- அவர் இந்திய தேசிய காங்கிரஸின் (INC) ஸ்தாபன உறுப்பினராக இருந்தார் என்பதோடு அவர் 1886, 1893 மற்றும் 1906 ஆம் ஆண்டுகளில் அதன் தலைவராகவும் பணியாற்றினார்.
- இவர் 1892 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் (MP) முதல் இந்திய உறுப்பினர் ஆவார்.
- அவர் சுயராஜ்யம், அரசியலமைப்பு முறைகள் மற்றும் நாடாளுமன்ற ஜனநாயகத்தை ஆதரித்தார் என்பதோடு மேலும் திலகர், கோகலே மற்றும் மகாத்மா காந்தி போன்ற தலைவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் இருந்தார்.
- நௌரோஜி இலண்டன் இந்தியச் சங்கம் (1865) மற்றும் கிழக்கிந்தியச் சங்கம் (1866) போன்ற அமைப்புகளை இணைந்து நிறுவினார்.
- அவர் "இந்தியாவின் முதுபெரும் மனிதர்" மற்றும் "இந்தியாவின் அதிகாரப் பூர்வமற்ற தூதர்" என்று நினைவு கூரப்படுகிறார்.
- அவரது 1906 ஆம் ஆண்டு INC தலைமை உரையே சுயராஜ்ஜியத்தினை ஒரு தேசிய இலக்காக ஏற்றுக் கொண்ட முதல் உரையாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★